" தேவமுல்லகே திலக் புஷ்பகுமார டயஸ் என்பவர், கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. சேனநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, பெப்புருவரி 18 ஆந் தேதிய 1374 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2005, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது மூன்று இலட்சத்துபதினேழாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றெட்டு ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 3,17,298.82) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1374 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 3,17,298.82 பணத்தொகையை 2005, ஒற்றோபர் 1 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் செலுத்தப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளையின் பள்ளேப்பற்றுவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹரிப்பிட்டிய என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் தெல்கஹவத்தை மறுபெயர் கலகடவத்தை என அழைக்கப்படும் காணியின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் என். பி. எல்விட்டிகல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, சனவரி 27 ஆந் தேதிய 2457 ஆம் இலக்க வபடைத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், அத்துடன் அச் சொல்லப்பட்ட காணித்துண்டு 1 இன் எல்லைகள்- வடக்கு :704 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 13 மற்றும் 1031 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு G ; கிழக்கு 1031 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு G மற்றும் 704 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 15 ; தெற்கு : 704 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 15 மற்றும் வீதி அத்துடன் ; மேற்கு: வீதி மற்றும் 704 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 13 அத்துடன் 2457 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் பத்தொன்பது தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 19.50பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்

9- 223/5

## ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கொட்டாஞ்சேனை கிளை) - விஜயரத்தினம் விக்கினேஸ்வரன் மற்றும் வனிதா விக்னேஸ்வரன்

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2003, யூன் 29 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"விஜயரத்தினம் விக்கினேஸ்வரன் மற்றும் வனிதா விக்னேஸ்வரன் என்போர், கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹல்லொலுவ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, சனவரி 19 ஆந் தேதிய 1164 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2006, திசெம்பர் 31 ஆந் தேதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது பதின்நான்கு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து நூற்றுப் பதினாறு ரூபா எழுபத்து மூன்று சதம் (ரூ. 14,95,116.73) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1164 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 14,95,116.73 பணத்தொகையை 2007, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது".

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (ஆனால் கொழும்பு பதிவுப் பிரிவிற்குள்) சியன கோறளையின் அதிகாரிப் பற்றுவில் பியகம பிரதேச சபையின் தெல்கொட உப அலுவலக எல்லைகளுக்குள் பட்டிவில மற்றும் பொல்லேகல என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் மானெல்வத்தை வீதி, 25/9 என்னும் வரிமதிப்பீட்டிலக்கத்தை கொண்டதும் மில்லகஹவத்தை மற்றும் மொறகஹஹேன. மில்ல கஹவத்தை, மகரகஹவத்தைமற்றும் கொஸ்கஹவத்தை, மில்லகஹவத்தை மற்றும் அலுபோகஹவத்தை, கொறகஹவத்தை, மில்லகஹகணத்தேவத்தை, மில்லகஹவத்தை, கொஸ்கலந்த, கொறக்கஹவத்தை, அலுபோகஹ வத்தை, கொறக்கஹவத்தை 3 பாகங்கள்) மற்றும் கொஸ்கஹலந்த என அழைக்கப்படும் காணியின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஆர். யு. விஜேதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, நவெம்பர் 18 ஆந் தேதிய 3313/2003 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதும் காணித்துண்டு 5 என

அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச் சொல்லப்பட்ட காணித்துண்டு 5 இன் எல்லைகள்– வடக்கு : ஜயம்பதி குணசேகர என்பவரின் காணி ; கிழக்கு : ஜயம்பதி குணசேகர என்பவரின் காணி மற்றும் 8450 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 8 ; தெற்கு : 8450 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டுகள் 7 மற்றும் 6 அத்துடன் ; மேற்கு : வீதி அத்துடன் சொல்லப்பட்ட 3313/2003 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பத்தொன்பது தசம் எட்டு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 19.80பே.) விஸ்தீரணமுடையதுமான காணி.

உரிமம்பெற்ற நிலஅளவையானர் வி. எவ். ஜே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 02.04.1983 ஆந் தேதிய 8450 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 4 என அடையாளமிடப்பட்டதுமான 4.5 மீ. அகல வீதிக்கான ஒதுக்குகை மீதும் அதன் வழியேயும் உள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்

9- 223/6

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 2400000989
கடனாளியின் முழுப்பெயர் : சிறிவர்தன திசாநாயககே செனவிரத்ன

“இரத்தினபுரியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. டபிள்யு. கீஜெல் என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 2937 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2002.12.19 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் (இதன் பிறகு கூட்டுத்தாபனம் என்று அழைக்கப்படும்) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால் மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்தத் தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து அறுநூற்று ஐம்பத்திரண்டு ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூ. 1,98,652.88) 2005.12.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன்தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு இலட்சத்து எழுபதாயிரத்து முந்நூற்றி தொண்ணூற்றி ஏழு ரூபா எழுபத்தொன்பது சதத்தினாலும் (ரூ. 1,70,397.79) அதற்கான 2005.12.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக இருபத்தி எட்டாயிரத்து இருநூற்றி ஐம்பத்தி ஐந்து ரூபா ஒன்பது சதத்தினையும் (ரூ. 28,255.09) மொத்தமாக ஒரு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து அறுநூற்றி ஐம்பத்திரண்டு ரூபா எண்பத்தெட்டு சதத்தினை (ரூ. 1,98,652.88) அறவீடு செய்யவும்.

2. குறிப்பிட்ட ஒரு இலட்சத்து எழுபதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஏழு ரூபா எழுபத்தொன்பது சதத்துக்கான (ரூ. 1,70,397.79) அறவீடு செய்ய வேண்டிய 10.50% மான வருடாந்த வட்டியினை 2006.01.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை.

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் ஏ. எஸ். லியனகே என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது”.

### அட்டவணை

சபரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில் தியபொத்த கம்பத்துவ சிறு பிரிவில் எம்பிலிபிடிய பிரதேச செயலக எல்லையில் எம்பிலிபிட்டிய உடுகம கிராமத்தில் இரண்டாவது ஒழுங்கையில் வரி மதிப்பீட்டிலக்கம் 31 இல் அமைந்துள்ள மோதரவத்த ஹேன்யாய என்றழைக்கப்படும் காணிக்கு 1994.06.27 ஆந் திகதி நிலஅளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் F.V.C. 778 பிற்சேர்க்கை இலக்கம் 63 காணி வரைபடத்தின்படி காணித்துண்டு 6421 இன் எல்லைகளாக வடக்கே : காணித்துண்டு இலக்கம் 6456 (பாதை) உம் ; கிழக்கே : காணித்துண்டு இலக்கம் 6424 உம் ; தெற்கே : காணித்தண்டு இலக்கம் 6423 உம் ; மேற்கே : காணித்துண்டு இலக்கம் 6420 உம் அமைந்து காணப்படுகின்றன. இந்த காணித்துண்டு இருபத்து நான்கு தசம் ஐந்து பேச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 24.5பே.) அதாவது (0.062 ஹெக்டாயர்கள்) பரப்பளவைக் கொண்டதாகும். இந்த காணித்துண்டும் கட்டிடங்கள், மரங்கள் மற்றும் அதற்கு சொந்தமான ஏனையவைகள் அனைத்தும் இரத்தினபுரி காணிப் பதிவு திணைக்களத்தில் ஜி 100/222 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2006, பெப்புருவரி 23.

9-226

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : 0100007133

கடனாளியின் முழுப்பெயர் : வீரதுங்க ஆரச்சிகே திஸ்னா மல்காந்தி மற்றும் அதபத்து ஹேவாவசம் லியனகே காமினி ஜயசிரி

"கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. ஏ. டி. திஸாநாயக்க என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 2739 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2005.04.28 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் (இதன் பிறகு கூட்டுத்தாபனம் என்று அழைக்கப்படும்) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால் மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்ட தன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்தத் தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் கீழ் ஐந்து இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எழுநூற்றி பதின்னான்கு ரூபா ஆறு சதம் (ரூ. 5,46,714.06) 2006.05.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன்தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான நான்கு இலட்சத்து தொண்ணூற்றாறாயிரத்து தொளாயிரத்து அறுபத்தாறு ரூபா நாற்பத்திரண்டு சதத்தினையும் (ரூ. 4,96,966.42) அதற்கான 2006.05.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக நாற்பத்து ஒன்பதாயிரத்து எழுநூற்ற நாற்பத்தேழு ரூபா அறுபத்தி நான்கு சதத்தினையும் (ரூ. 49,747.64) இதன்படி மொத்தமாக ஐந்து இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எழுநூற்றி பதின்னான்கு ரூபா ஆறு சதம் (ரூ. 5,46,714.06) அறவீடு செய்யவும்.

2. குறிப்பிட்ட நான்கு இலட்சத்து தொண்ணூற்றாறாயிரத்து தொளாயிரத்து அறுபத்தாறு ரூபா நாற்பத்திரண்டு சதத்துக்கான (ரூ. 4,96,966.42) அறவீடு செய்ய வேண்டிய 12.00% மான வருடாந்த வட்டியினை 2006.06.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை. அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்கிரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது".

கடன் இலக்கம் 0100007133

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கடுவல பிரதேச சபை எல்லையில் ஹேவாகம கோரளையின் பல்லேபத்து கொரத்தொட்ட எனும் கிராமத்தில் அமைந்துள்ள கல்பொடவத்த என்றழைக்கப்படும் காணிக்கு, 1997.10.13 ஆந் திகதி எஸ். ராமகிருஷ்ணன் என்ற அனுமதி பெற்ற நிலஅளவையாளரினால் நிலஅளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 6451 இலக்கத்தினைக் கொண்ட நிலஅளவை வரைபடத்தின்படி பி என்று குறிக்கப்படும் காணித்துண்டு. வடக்கே : 10 அடி பாதையையும் ; கிழக்கே : எம். டி. எச். ஜயவர்தன மாவத்தையையும் ; தெற்கே : ஆர். ஏ. பியதாச மற்றும் ஏனையவர்களுக்கும் சொந்தமான காணி ; மேற்கே : காணித்துண்டு குறியீட்டு இலக்கம் A யினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் இருபது பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 20பே.). 6451 க்கு ஏட்ப இக்காணித்துண்டும் இதற்கு சொந்தமான கட்டிடங்கள், பயிரினங்கள், மரங்கள், பாதைகள் மற்றும் ஏனையவைகள் அனைத்தும் ஹோமாகம காணிப் பதிவாளர் அலுவலகத்தில் ஜி/1540/151 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2006, யூலை 28.

9-227

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கொழும்பு 6, விவேகானந்த றோட், இல. 34 ஐச் சேர்நத திரு. கந்தப்பர் முத்தையாபிள்ளை தம்பிராஜா ஈடுவைத்த ஆதனம்.

2005.09.08 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர்கள் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :-

"1. பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். ரணவக்க அத்தாட்சிப்படுத்திய 2003, பெப்புருவரி 7 ஆந் திகதியிட்ட முறி இல. 1772 இன் பேரில் திரு. கே. எம். தம்பிராஜாவிடமிருந்து முதலும் 2005 யூலை 31 வரை வட்டியும் ஒரு கோடி நாற்பத்திமூன்று இலட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்றிரண்டு ரூபா முப்பத்தைந்து சதத்தில் (ரூ. 1,43,60,602.35) அத்துடன் மீள் அட்டவணைக் கடன் ஏ மீது எண்பத்தேழு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நூற்றி நாற்பத்தாறு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 87,66,146.65) ஆண்டுக்கு 14 வீதத்திலும், மீள் அட்டவணைக்கடன் பீ மீது நாற்பத்தொரு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து எந்நூற்றி

இருபத்தைந்து ரூபா (ரூ. 41,97,825) ஆண்டுக்கு 8 வீதத்திலும் 2005, ஓகத்து 01 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளது.

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 1772 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஒரு கோடி நாற்பத்திமூன்று இலட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்றிரண்டு ரூபா முப்பத்தைந்து சதமும் (ரூ. 1,43,60,602.35) அத்துடன் 2005.08.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும்பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 55ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 3 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவின் அதன் திருத்தங்களுக்குமமைய இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### காணிச்சொத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்றுவில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் வோர்ட் இல. 11, மசங்கஸ் வீதியில் பழைய சோனகத் தெருவில் அமைந்த தற்சமயம் பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 177ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். டொன் டேவிட் தயாரித்த 1945 திசெம்பர் 29 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3810 இல் விபரித்த குறித்த காணியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடத்துடனான காணித்துண்டு வடக்கில் : வரிமதிப்பிலக்கம் 198, G/200, 202, 204, 206 மற்றும் G/210 நிலமனையும் புதிய சோனகத்தெருவும் ; கிழக்கில் : பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 181 ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கில் : பழைய சோனகத் தெருவும் ; மேற்கில் : பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 1 73 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். லோகநாதன் தயாரித்த 1980, ஓகத்து 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2607 இன்படி பதினெட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18 பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப் பதிவகத்தில் ஏ 892/49 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. சின்னத்தம்பி தயாரித்த 1991, செத்தெம்பர் 26 ஆந் திகதியிட்ட மிகவும் அண்மைய அளவை வரைபடம்இல. 3705 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்றுவில் கொழும்பு மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் வோர்ட் இல. 11, மசங்கஸ் வீதியில் பழைய சோனகத் தெருவில் அமைந்த, பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 177ஐக் கொண்ட இடத்தில் அமைந்துள்ள கட்டிடங்களுடனான காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3705 இல் விபரித்த துண்டு ஏ என அடையாளமிட்ட பிரிக்கப்படட குறித்த காணித்துண்டு வடக்கில் : சோனகத்தெரு வரிமதிப்பிலக்கம் 198, G/200, 202, 204, 206 மற்றும் G/210 உம் ; கிழக்கில் : பழைய சோனகத் தெரு, வரிமதிப்பிலக்கம் 181 ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கில் : பழைய சோனகத் தெருவும் ; மேற்கில் : பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 173 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3705 இன்படி பத்தொன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 19 பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

எஸ். டி. சில்வா,
தொடர்பாடல் முகாமையாளர்,
(அறவீடு - தொகுதி).

**கவனிக்க.**-பணிப்பாளர் சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தன் பின்பு குறிப்பிட்ட கடன் பொறுப்புகளைக் குறைக்கும் பொருட்டு திரு. கந்தப்பர் முத்தையாபிள்ளை தம்பிராஜாவினால் ரூ. 22,69,800 வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி,
அறவீடுகள் பிரிவு,
3 ஆம் தளம், தலைமை அலுவலகம்,
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1.
2007.08.15.

9-225

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0230001023
கடனாளியின் முழுப்பெயர் : ராஜபக்ஷ பிரிஸ்யால அப்புஹாமிலாகே சிரியானி நதீரா ராஜபக்ஷ

"கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். கே. ஜயசேகர என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 631 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2001.01.01 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் (இதன் பிறகு கூட்டுத்தாபனம் என்று அழைக்கப்படும்) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால் மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்தத் தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு ரூபா பதினேழு சதம் (ரூ. 1,78,786.17) 2003.05.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன்தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நாநூற்றி

இருபத்து மூன்று ரூபா இரண்டு சதத்தினையும் (ரூ. 1,46,423.02) அதற்கான 2003.05.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக முப்பதாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று ரூபா பதினைந்து சதத்தினையும் (ரூ. 30,363.15) இதன் மொத்தமாக ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு ரூபா பதினேழு சதம் (ரூ. 1,78,786.17) அறவீடு செய்யவும்.

2. குறிப்பிட்ட ஒரு இலட்சத்து நாற்பத்தாராயிரத்து நானூற்றி இருபத்து மூன்று ரூபா இரண்டு சதத்துக்கான (ரூ. 1,46,423.02) அறவீடு செய்ய வேண்டிய 13.50% மான வருடாந்த வட்டியினை 2003.06.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களைஅறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்படடுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. பீ. சீ. பெரேரா என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், திவுலபிட்டிய பிரதேச சபை எல்லையில் ஹபிடிகம்கோரளை யட்டிகஹபத்தவில் கலுஅக்கல எனும் பிரதேசத்தில் அமைந்துள்ள கஹடகஹவத்தை என அழைக்கப்படும் காணிக்கு, 2000.01.20 ஆந் திகதி ஜே. எம்.எப். எஸ். வீரசிங்க என்ற அனுமதி பெற்ற நிலஅளவையாளரினால் அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 574 இலக்கத்தினைக் கொண்ட காணி வரைபடத்தின்படி 1 மற்றும் 2 இலக்கங்களைக் கொண்ட காணித்துண்டுகள் வடக்கே : ஆர். பீ. ஹரிஸ்சந்திர என்பவருக்கு சொந்தமான காணியும் 8 ஆம் இலக்க காணித்துண்டு (நுழைவுப்பாதை); கிழக்கே : 8 மற்றும் 3 ஆம் இலக்கங்களைக் கொண்ட காணித்துண்டுகளும் ; தெற்கே : காணி வரைபடம் இல. 4489 இன் 2 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : ஜே. பீ. ஏ. பப்லிஸ் அப்புஹாமிக்கு சொந்தமான காணியினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இவற்றின் பரப்பளவு முப்பத்தாறு தசம் ஐந்து பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 36.5பே.). 574 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி இங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், பாதைக்கான உரிமை போன்ற அனைத்தும் நீர்கொழும்பு காணிப் பதிவு அலுவலகத்தில் டி/271/267 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காணித்துண்டுகளில் 8 ஆம் இலக்க காணித்துண்டுக்கு (15 அடி அகலமான பாதை ஒதுக்கப்பட்டுள்ளது) இது 574 ஆம் இலக்க காணி வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 3 ஆம் இலக்க காணித்துண்டுக்கு (8 அடி அகலமான பாதை ஒதுக்கப்பட்டுள்ளது) குறிப்பிடப்பட்ட 4489 ஆம் இலக்க காணி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2007, யூலை 31.

9-228

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0230000720
கடனாளியின் முழுப்பெயர் : சவலப்புகே ஜோசப் ஜயந்த பெர்னாந்து மற்றும் லின்தர முதியான்சலாகே பிரியங்கனி மங்கலிகா

"புத்பிடியவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. கே. என். பி. விதான என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 2683 ஆம் இலக்கத்தைக் கொண்ட 1999.08.05 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் (இதன் பிறகு கூட்டுத்தாபனம் என்று அழைக்கப்படும்) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால் மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்தத் தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்து இருநூற்றி நான்கு ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 1,40,204.78) 2005.09.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன்தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐநூற்றி இருபத்தெட்டு ரூபா ஐம்பத்தைந்து சதத்திற்கான (ரூ. 1,19,528.55) அதற்கான 2005.09.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக இருபதாயிரத்து அறுநூற்று எழுபத்தாறு ரூபா இருபத்தி மூன்று சதத்தினையும் (ரூ. 20,676.23) இதன் மொத்தமாக ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்து இருநூற்றி நான்கு ரூபா எழுபத்தெட்டு சதத்தினை (ரூ. 1,40,204.78) மீள அறவீடு செய்யவும்.

2. குறிப்பிட்ட ஒரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐநூற்று இருபத்தெட்டு ரூபா ஐம்பத்தைந்து சதத்துக்கான (ரூ. 1,19,528.55) அறவீடு செய்ய வேண்டிய 15.50% மான வருடாந்த வட்டியினை 2005.10.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்கள். அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்படடுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்கிரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிபபாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குருகோரளை ராகம பத்துவவில் நீர்கொழும்பு காணிப் பதிவாளர் பிரிவில் கட்டான பிரதேச சபை ரத்தொலுகம உப அலுவலகப் பிரிவு எல்லையில் கொட்டுகொட கிராமத்தில் அமைந்துள்ள மாரகஹாவத்த மற்றும் கொரககஹவத்த என்றழைக்கப்படும் காணிக்கு 1998.07.30 ஆந் திகதி எஸ். எம். திசாநாயக்க என்ற அனுமதி பெற்ற நிலஅளவையாளரினால் அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 6313 இலக்கத்தினைக் கொண்ட காணி வரைபடத்தின்படி 22 இலக்கத்தைக் குறிக்கும் காணித்துண்டு வடக்கே : காணித்துண்டு இலக்கம் 20 ஐயும் ; கிழக்கே : பாதையையும் (பிரதேச சபை) ; தெற்கே : ரொபட் பெர்னாந்துவின் காணியும் ; மேற்கே : காணித்துண்டு இலக்கம் 21 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இதன் விஸ்தீரணம் 10 பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 10பே.). இந்த காணித்துண்டும் இதற்கு சொந்தமான கட்டிடங்கள், மரங்கள், பயிரினங்கள் மற்றும் ஏனையவைகள் அனைத்தும் நீர்கொழும்பு காணிப் பதிவு அலுவலகத்தில் பி/143/225 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2006, சனவரி 24.

9-229

### கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிபாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

கணக்கு இலக்கம் : 1050019201
கடன் கணக்கு இலக்கம் : 114783
தொடம்ப கமகே சமந்த புஸ்பலால்.
கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட கூட்டமொன்றில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த தொடம்ப கமகே சமன்த புஸ்பலால் என்பவர் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் சார்பாக காலி பிரசித்த நொத்தாரிசு கே. சி. விஜயநாரயனவின் 06.09.2001 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 387 மற்றும் 09.08.2002 ஆந் திகதியுடைய 478 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும் மேற்படி முறிகள் பிரகாரம் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு 22.02.2007 ஆந் திகதிவரை ரூபா 6,72,295.65 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் மேற்படி முறிகள் இலக்கங்கள் 387 மற்றும் 478 மூலம் ஈடுவைத்த காணியையும் ஆதனங்களையும் மேற்படி பணத்தொகையான ரூபா 6,72,295.65 வுடன் 23.02.2007 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 5,39,674.12 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 20 சத வீத வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்து (பணம் செலுத்தியபின் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிரவட்ஸ் எல்லைக்குள் மாநகர சபையில் எட்டிலிகொட கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எச். எஸ். விதாணாச்சியின் 27.12.2000 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 991 இல் காண்பிக்கப்பட்ட உஸ்சோவிட்டவத்த என்ற காணியின் லொட் A என்ற ஆதனமும் அதில் அமைந்துள்ள (பழையது) இலக்கம் 27 (புதியது) இலக்கம் 53 மக்குலுவை லேன், இலக்கம் 01 என்ற கட்டிடமும் உள்ளடக்கிய இக்காணியின் லொட் A எல்லைகள் : வடக்கு : அடிப்பாதை ; கிழக்கு : மக்குலுவ ஒழுங்கை இலக்கம் 01 ; தெற்கு : இக்காணியின் லொட் B ; மேற்கு : இக்காணியின் ஒரு பகுதி. இக்காணியின் விஸ்தீரணம் பதின்மூன்று தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 13.50பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 991 படி இக்காணி காலி காணிப் பதிவகத்தில் A568/206 இல் பதிவு செய்யப்பட்டது.

திருமதி ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

9-217

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : 0230001413
கடனாளியின் முழுப்பெயர் : வில்பிட்ட ஹேவா கமகே அருண சாந்த

"நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. ருஹுனுஹேவா என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 2447 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2004.05.14 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் (இதன் பிறகு கூட்டுத்தாபனம் என்று அழைக்கப்படும்) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு கடனாளியினால் மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்தத் தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் கீழ் மூன்று இலட்சத்து நான்காயிரத்து ஐநூற்று ஐம்பத்தொரு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூ. 3,04,551.42) 2005.12.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன்தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான இரண்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்றி எண்பத்தாறு ரூபா முப்பத்திமூன்று சதத்தினையும் (ரூ. 2,58,186.33) அதற்கான 2005.12.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக நாற்பத்து ஆறாயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து ரூபா ஒன்பது சதத்தினையும் (ரூ. 46,365.09) மொத்தமாக மூன்று இலட்சத்து நான்காயிரத்து ஐநூற்றி ஐம்பத்தொரு ரூபா நாற்பத்திரண்டு சதத்தினை (ரூ. 3,04,551.42) அறவீடு செய்யவும்.

2. குறிப்பிட்ட இரண்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்றி எண்பத்தாறு ரூபா முப்பத்திமூன்று சதத்திற்கான (ரூ. 2,58,186.33) அறவீடு செய்ய வேண்டிய 12.50% மான வருடாந்த வட்டியினை 2006.01.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்.

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை.

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்படடுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்கிரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குறு கோரளையின் துனகஹபத்துவில் கட்டான பிரதேச சபை எல்லையில் கதிரான வடக்கே அமைந்துள்ள வெஸ்டர் சீடன் பாம் என்றழைக்கப்படும் காணிக்கு 2001.04.09 ஆந் திகதி டபிள்யூ. எஸ். எஸ். மென்டிஸ் என்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளரினால் அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 2172/B இலக்கத்தைக் கொண்ட காணி வரைபடத்தின்படி இலக்கம் 6 ஐ குறிக்கும் காணித்துண்டு வடக்கே : 5 ஆம் இலக்க காணித்துண்டையும் ; கிழக்கே: பாதையையும் (2684 காணி வரைபடத்தின் 13 ஆம் இலக்க காணித்துண்டின்); தெற்கே : 7 ஆம் இலக்க காணித்துண்டையும் ; மேற்கே : ஜீ. ஜே. பர்னாந்து மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான அதே காணியின் ஒரு பகுதியினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பன்னிரென்டரை பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 12.5பே.). இக்காணித்துண்டும் இதற்கு சொந்தமான கட்டிடங்கள், மரங்கள், பாதைகள் மற்றும் காணி வரைபடம் 2684 இன் காணித்துண்டு 13 இன் பாதைக்கான உரிமையுடன் அனைத்தும் நீர்கொழும்பு காணிப் பதிவு திணைக்களத்தில் E908/51 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

கொழும்பு,
2006, பெப்புருவரி 23.

9-230

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 2.30 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.**

**அட்டவணை-2007**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2007 |
| | | வெள்ளி | 14.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.08.2007 |
| | | வெள்ளி | 21.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2007 |
| | | வெள்ளி | 28.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2007 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2007 |
| | | வெள்ளி | 12.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.09.2007 |
| | | வெள்ளி | 19.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2007 |
| | | வெள்ளி | 26.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2007 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 02.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.10.2007 |
| | | வெள்ளி | 09.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.10.2007 |
| | | வெள்ளி | 16.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.11.2007 |
| | | வெள்ளி | 23.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.11.2007 |
| | | வெள்ளி | 30.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.11.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.